**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்</u>**

**<u>DEPOSITION OF WITNESSES</u>**
(Chapter XXIII Cr.P.C)

**CMP.NO.579/2025**

**WITNESS NO.-1**

**Date: 05.01.2026**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. ராகேஷ்குமார் | வயது | 44 |
| கணவர்/தந்தை பெயர் | தட்சணாமூர்த்தி | மதம் | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969, (Central Act 44 of 1969) on the 05th **day of January, 2026**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

**<u>பிரமாண வாக்குமூலம் தொடர்ச்சி –</u>**

11. கடந்த 2024 ஆம் ஆண்டு மே மாதம் காவல் நிலைய விசாரணையில் ஆஜராகி நான் எதிர்மனுதாரர்கள் மீது உண்மையான புகார் தான் கொடுத்துள்ளதாக தெரிவித்தேன். எஸ்.பி.ஜ யுனிடி என்கிளேவ் பிராஜட் சம்பந்தமாக ரூ.850 கோடி மதிப்பீடு செய்யப்பட்டு இருந்தது. அதில் ரூ.57 கோடி இடத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்டு இருந்தது. அதன் மதிப்பீடு அடிப்படையில்தால் ஒரு சதுரடியின் மதிப்பு ரூ.2975/- மதிப்பு செய்யப்பட்டு இருந்தது. ஆனால் நான் பதித்துறை வலைதளத்தை ஆய்வுசெய்து பார்த்ததில் அந்த இடத்தின் மதிப்பு ரூ.10.5 கோடி என்பது தெரியவந்தது. அந்த அடுக்குமாடி குடியிருப்பின் மொத்த இடத்தின் விஸ்திரணம் 28.4 ஏக்கர் அதில்

21.33 ஏக்கர் அளவில் கட்டிடம் காட்டப்பட்டு இருந்தது.

12. அந்த கட்டிடம் கட்டப்பட்ட இடத்தை தவிர மீதம் இருந்த 4.5 ஏக்கர் இடத்தை விளையாட்டு பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டது போக மீதம் இருக்கவேண்டிய இடம் என்ன ஆனது என்று இதுநாள் வரை தெரிவிக்கவில்லை. நாங்கள் அந்த போஸ் அக்கடமிக்காக பணம் கொடுக்கவில்லை. அதனை அவர்களே அந்த பயன்பாட்டிற்காக எங்களிடம் இருந்த வசூல் செய்து கொண்டார்கள். அது சம்பந்தமாக நான் கடந்த 19/04/2024 அன்று காவல்துறை தலைவருக்கு புகார் கொடுத்தேன். மேலும் தீயணைப்பு துறையின் மூலமாக எங்கள் குடியிருப்பை கடந்த பிப்ரவரி மாதம் 2024 ஆம் ஆண்டு ஆய்வு செய்து அது சம்பந்தமாக அறிவிப்பு கொடுக்கப்பட்டதாலும் எதிர்மனுதாரர்களுக்கு என் மீது கோபம் ஏற்பட்டது.

13. மேற்கண்ட குறைபாடுகள் சம்பந்தமாக தாம்பரம் சங்கம் பதிவு அலுவலகத்தில் புகார் கொடுத்தது சம்பந்தமாக 05/08/2024 அன்று விசாரணை நடத்தப்பட்டது. அந்த விசாரணை சம்பந்தமாக எதிர்மனுதாரரும் ஆஜராகி இருந்தார். விசாரணை முடிவில் எங்கள் தரப்பில் கேட்கப்பட்ட ஆவணங்களை எங்களுக்கு காண்பிக்கும்படி பதிவாளர் எதிர்மனுதாரருக்கு அறிவுறுத்தினார். இன்டிரியர் பணிகள் சம்பந்தமாக எலிசான் என்ற நிறுவனம் எங்கள் அடுக்குமாடி குடியிருப்பில் பணிகள் செய்கிறார்கள் ஆனால் அவர்கள் அந்த பணிகளை முடிக்காமல் ஏமாற்றிவிட்டு சென்றுவிட்டார்கள். அதனால் 20 முதல் 30 உரிமையாளர்கள் பாதிக்கப்பட்டோம். அதற்கு உடந்தையாகவும் எதிர்மனுதாரர் செயல்பட்டார். ஒவ்வொரு உரிமையாளரிடம் இருந்து ரூ.2 முதல் 3 லட்சம் வசூல் செய்தது.

14. அந்த நிறுவனம் ஏற்படுத்திய உடன்படிக்கையும் தாக்கல் செய்துள்ளேன். 02/10/2017 தேதியிட்ட உடன்படிக்கை நகல் தாக்கல் செய்கிறேன். இந்நிலையில் 10/11/2024 அன்று எங்கள் குடியிருப்பில் உள்ள வெங்கடேசன் என்பவர் எனக்கு தொடர்பு கொண்டு அவர் வாட்ஸ்அப்பில் ஆபாசமாக மெசேஜ் அனுப்பியதாக அவர் மீதும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளதாக என்னிடம் சொன்னார். எனவே அந்த விசாரணை சம்பந்தமாக காவல் நிலையம் செல்ல வேண்டியுள்ளதாகவும் என்னிடம் உள்ள ஆவணங்களை கொண்டு வரும்படி கேட்டார். நான் காவல் நிலையம் சென்றபோது போலிசார் என் மீதும் வழக்கு பதிவுசெய்த விவரம் தெரியவந்தது.

15. விசாரித்தபோது நான் பெண்களை ஆபாசமாக திட்டியதாக எதிர்மனுதாரர் புகார் கொடுத்ததின் பேரில் வழக்கு பதிவு செய்துள்ளது தெரியவந்தது. அந்த விசாரணையில் போலிசார் அது சிறிய வழக்கு தான் என்றும் என்னை செல்லும்படி சொல்லிவிட்டார்கள். நான் எனக்கு எதிராக கொடுக்கப்பட்ட புகாரை காண்பிக்கும்படி கேட்தற்கு வெங்கடேசன் என்பவர் அனுப்பிய வாட்ஸ்அப் மெசேஸ்யை காண்பித்தார்கள். மீண்டும் வேறு ஒரு நாள் வரசொன்னார்கள். அன்றைய தினம் என்னை சமரசமாக செல்லும்படி போலிசார் வற்புறுத்தினார்கள். எனவே நான் 23/11/2024 அன்று ஆணையர் அலுவலகத்தில் அது சம்பந்தமாக புகார் அனுப்பினேன். (23/11/2024 தேதியிட்ட புகார் நகல் தாக்கல் செய்கிறேன்)

16. ஆனால் 20/12/2024 அன்றுபோலிசார் என்னை அந்த விசாரணை சம்பந்தமாக அழைத்து மீண்டும் எனக்கு எதிராக புகார் வராமல் பார்த்துக்கொள்ளும் படியும் அவ்வாறு புகார் வந்தால் குண்டர் சட்டத்தில் கைது செய்வோம் என்று

சொன்னார்கள். எனவே நான் அந்த முதல் தகவல் அறிக்கையை ரத்து செய்வதற்கு உயர்நீதிமன்றத்திற்கு மனுதாக்கல் செய்ய ஆவணங்கள் கோரியும் போலிசார் எனக்கு எந்த ஆவணமும் தரவிரவில்லை. எனவே எவ்வித முகாந்திரமின்றி இந்த நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள். இதனிடையே எதிரிமனுதாரர் நான் அவருக்கு எதிராக ரேரா மற்றும் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நீதிமன்ற அவமதிப்பு மனுவை திரும்ப பெற்றுக்கொள்ளும்படி சீலா என்ற சுபாஷினி என்பவர் மூலமாக சமரசம் பேசினார்.

17. நான் அதற்கு மறுத்து விட்டேன். என் மனைவி ரேராவில் எதிர்மனுதாரர் சங்கத்திற்கு எதிராக கொடுத்த மனுவில் எங்களுக்கு ஆதரவாக உத்தரவாகியது. (13/08/2025 தேதியிட்ட புகார் எண். 26/2024 உத்தரவு நகல் தாக்கல் செய்கிறேன்) எனவே எதிர்மனுதாரர் செய்த குற்றங்கள் சம்பந்தமாக நான் சம்பந்தப்பட்ட அரசு அலுவலகங்களுக்கு புகார் அனுப்பியதாலும் அது சம்பந்தப்பட்ட விவரங்களை வெளியில் கொண்டுவந்தாலும் முண்விரோதம் காரணமாக எதிர்மனுதாரர் எனக்கு எதிராக காவல் நிலையத்தில் பொய் புகார் கொடுத்து என்னை அளைக்க வைத்துள்ளதால் எதிர்மனுதாரருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்க கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன். எனவே இம்மனுவை கோப்பிற்கு எடுத்து எதிர்மனுதாரருக்கு அழைப்பாணை சார்வு செய்து அவருக்கு உரிய தண்டனை வழங்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

S/d- K.Nilavarasan, 05.01.2026
District Munsif cum Judicial Magistrate,
Thiruporur.